தின குரல்

dinakuralnews.in

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,

(இ).த.ப.எண்: 397/2022/ஆ2

செல்வசுந்தரி
க/பெ மணிகண்டன்
முடுக்கு தெரு,
சூரக்கோட்டை கிராமம்,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்
...எதிர்மனுதாரர்

**கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி மனுதாரர் அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது மாமனார் **பக்கிரிசாமி த/பெ குமரசாமி** என்பவர் கடந்த **01.12.1996**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது மாமனார் **பக்கிரிசாமி** இறப்பு மேற்படி எதிர் மனுதாரர் அலுவல கத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**செல்வசுந்தரி**
**க/பெ மணிகண்டன்**

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,

(இ).த.ப.எண்: 70/2023/ஆ2

மணிவாசகம்
த/பெ வீரு
190/1, வடக்கு கள்ளர் தெரு,
அகரப்பேட்டை,
பூதலூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூதலூர்
...எதிர்மனுதாரர்

**கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி மனுதாரர் அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது தகப்பனார் **வீரு த/பெ சீனிவாசன்** என்பவர் கடந்த **02.10.1992**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது தகப்பனார் **வீரு** இறப்பு மேற்படி எதிர் மனுதாரர் அலுவல கத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சே பனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**மணிவாசகம்**
**த/பெ வீரு**

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,

(இ).த.ப.எண்: 555/2023/ஆ2

உத்திராபதி
த/பெ ராமையன்
30, கீழத்தெரு, தெக்கூர்,
ஒரத்தநாடு வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஒரத்தநாடு
...எதிர்மனுதாரர்

**கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி மனுதாரர் அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது தாயார் **வள்ளியம்மை க/பெ லேட்.ராமையன்** என்பவர் கடந்த **10.01.1993**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது தாயார் **வள்ளியம்மை** இறப்பு மேற்படி எதிர் மனுதாரர் அலுவல கத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சே பனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**உத்திராபதி**
**த/பெ ராமையன்**

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக,

(இ).த.ப.எண்: 145/2023/ஆ2

மங்களேஸ்வரி
க/பெ பரமசிவம்,
170, கீழத்தெரு,
குளிச்சப்பட்டு,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.
...மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்
...எதிர்மனுதாரர்

**கோட்டாட்சியர் அறிவுறுத்தலின்படி மனுதாரர் அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் தனது மாமனார் **முனியாண்டி த/பெ சாமிநாதன்** என்பவர் கடந்த **12.10.2011**-ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். இறப்பு சான்று பெறுவதற்கு எனது மாமனார் **முனியாண்டி** இறப்பு மேற்படி எதிர் மனுதாரர் அலுவல கத்தில் பதிவு செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்த மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் சமூகம் தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சே பனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மனு மீது ஒருதலை பட்சமாக உத்தரவு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**மங்களேஸ்வரி**
**க/பெ பரமசிவம்**

**மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம், தஞ்சாவூர்**

**O.S.No.545/2023**

யூனியன் பேங்க் ஆப் இந்தியா,
திருவையாறு கிளை,
அதன் சார்பாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தஞ்சாவூர்
...வாதி

எதிர்

1 A.ராஜகோபால் (இறந்துபோனவர்)
2. R. நாகராஜன்
...பிரதிவாதிகள்

**மனுதாரர் சார்பில் தரப்படும் பொது அறிவிப்பு**

மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி மேற்படி வங்கியில் வாங்கிய கடனுக்கு வழக்கு தொடரப்பட்டு மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த அசல் வழக்கில் வருகிற **27.11.2023** தேதிக்கு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பிரதிவாதிக்கு பலமுறை நீதி மன்றத்தின் மூலம் அறிவிப்பு அனுப்பியும் சார்பாகவில்லை. எனவே நீதிமன்ற உத்தரவுபடி எதிர்வரும் **27.11.2023-ம்** தேதி காலை 10 மணிக்கு நீதிமன்றத்தில் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தன்னுடைய ஆட்சேபனணயை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு வாதிக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மானிக்கும்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் கண்டிப்பாக அறியவும்.

**G. அன்பரசன்., M.A., B.L.,**
**வழக்கறிஞர், தஞ்சாவூர்**

**தஞ்சாவூர் இயக்கூர்தி விபத்து இழப்பீடு கோரிக்கை தீர்ப்பாயம்/சிறப்பு சார்பு நீதிமன்றம்**

**I.A.No.1835/2023**

**In**

**MCOP.No.169/2023**

திருவாரூர் மாவட்டம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
குன்னலூர், இலக்கம் 2/29,
கீழசேத்திதெரு என்ற முகவரியில்
வசித்து வரும் வேதையன் மகன்
V.தேவதாஸ்
...மனுதாரர்

எதிர்

திருவாரூர் மாவட்டம்,
திருத்துறைப்பூண்டி தாலுக்கா,
ஒவரூர், இலக்கம் 4-156-பி,
தெற்கு தெரு, என்ற முகவரியில்
வசித்து வரும் ராஜேந்திரன்
மகன் அன்புராஜ்
...1-ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

கடந்த 10.02.2022 தேதி வாகன விபத்தில் கொடுங்காயமடைந் ததற்காக சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரரால் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர் மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி சர்வாகாதபடியால் வாய்தா விபரத்தை நாளிதழில் பொது அறிவிப்பு செய்திட உத்தரவாகி வருகின்ற **21.11.2023** தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. 1ம் எதிர் மனுதாரருக்கு ஆட்சேபனை எதுவும் இருப்பின் **21.11.2023ம்** தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் விவரம் அறியவும்.

**R.S. ஜெயசங்கர்., B.A., B.L.,**
**வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக், தஞ்சாவூர்**

**தஞ்சாவூர் இயக்கூர்தி விபத்து இழப்பீடு கோரிக்கை தீர்ப்பாயம்/சிறப்பு சார்பு நீதிமன்றம்**

**I.A.No.1960/2023**

**In**

**MCOP.No.292/2023**

நாகப்பட்டிணம் மாவட்டம்,
ஒக்கூர், பெருமாள் கோவில்,
இலக்கம் 218, மேலத்தெரு என்ற
முகவரியில் வசிக்கும்
மகாலிங்கம் மகன் M.பாஸ்கரன்
...மனுதாரர்

எதிர்

பாண்டிச்சேரி,
காரைக்கால், இலக்கம் 1/5,
சின்னக்கண்ணு செட்டிதெரு,
என்ற முகவரியில் வசிக்கும்
மதியழகன் மகன் ஐயப்பன்
...1-ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

கடந்த 24.06.2022 தேதி வாகன விபத்தில் கொடுங்காயமடைந் ததற்காக சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரரால் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு 1ம் எதிர் மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி சர்வாகாதபடியால் வாய்தா விபரத்தை நாளிதழில் பொது அறிவிப்பு செய்திட உத்தரவாகி வருகின்ற **12.12.2023** தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. 1ம் எதிர் மனுதாரருக்கு ஆட்சேபனை எதுவும் இருப்பின் **12.12.2023** தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ, வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் விவரம் அறியவும்.

**R.S. ஜெயசங்கர்., B.A., B.L.,**
**வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக், தஞ்சாவூர்**

தலை கவசம் உயிர் கவசம்

தினமும் காலையில் படியுங்கள்

தின குரல்
தேசிய தமிழ் நாளிதழ்

SOUTHERN Mail
National English Daily

दिन.संसार
தின் ● சன்சார்
தேசிய இந்தி நாளிதழ்

சென்னை பதிப்பு

புதுச்சேரி பதிப்பு

கடலூர் பதிப்பு

# “பெண்களின் நம்பிக்கையை ராஜஸ்தான் காங். அரசு சிதைத்துவிட்டது”: பிரதமர்

**ஜெய்ப்பூர், நவ.19:**

ராஜஸ்தான் மாநிலம் பாரத்பூரில் சனிக்கிழமை நடந்த தேர்தல் பிரச்சாரப் பேரணிக் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேசும்போது, “ராஜஸ்தான் மக்கள் ஒரு மந்திரவாதிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டார்கள். தேர்தலுக்கு பின்னர் காங்கிரஸ் முற்றிலுமாக வெளியேற்றப்படும். டிசம்பர் 3-ம் தேதி காங்கிரஸுக்கு ச்சூ மந்திரம் நடக்கும். அரசியலுக்கு வருவதற்கு முன்பாக ஒரு தொழில்முறை மந்திரவாதியின் (மேஜிஷியன்) மகனான அசோக் கெலாட், நாடு முழுவதும் சுற்றிக்கொண்டு மேஜிக் நிகழ்ச்சிகள் நடத்தி னார்.

ஒருபுறம் இந்தியா உலக அளவில் முன்னணியில் வளர்ந்து வருகிறது. மற்றொருபுறம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ராஜஸ்தானில் என்ன நடந்தது என்பது உங்களுக்கே தெரியும். காங்கிரஸ் அரசு ராஜஸ்தான் மாநிலத்தை ஊழல், கலவரங்கள் மற்றும் குற்றங்களில் முதலிடம் பிடிக்க வைத்துள்ளது. அதனால்தான் ராஜஸ்தான் மக்கள் ‘மந்திரவாதி ஜி உங்களுக்கு எந்த ஒரு ஓட்டும் கிடைக்காது’ என்று சொல்கிறார்கள்.

எங்கெல்லாம் காங்கிரஸ் ஆட்சிக்கு வருகிறதோ, அங்கெல்லாம் தீவிரவாதிகள், குற்றவாளிகள் மற்றும் கலவரக்காரர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். காங்கிரஸின் கொள்கையே திருப்திப்படுத்துவதுதான். அது உங்கள் உயிரை பணயம் வைப்பதாக இருந்தாலும் சரி. காங்கிரஸ் தலைமையிலான இந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் ராஜஸ்தானில் பெண்கள், தலித்துகளுக்கு எதிராக அதிகமான குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

ஹோலி பண்டிகையோ, ராம நவமியோ, ஹனுமன் ஜெயந்தியோ எதையும் நீங்கள் அமைதியாக கொண்டாட முடியவில்லை. அவற்றில் கலவரம், கல்வீச்சு, ஊரடங்கு போன்றவை ராஜஸ்தானில் தொடர்கதையாகிப் போனது. ராஜஸ்தான் பெண்களின் மன உறுதியை காங்கிரஸ் கட்சி சிதைத்துவிட்டது” என்று பிரதமர் மோடி பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர், “பெண்கள் போலியாக பாலியல் வன்கொடுமை புகார் அளிப்பதாக முதல்வர் கூறியுள்ளார். அவரால், பெண்களைப் பாதுகாக்க முடியாதா? அப்படி பாதுகாக்க முடியாத முதல்வர் ஒரு நிமிடம் கூட பதவியில் இருக்கலாமா?” என்று கேள்வி எழுப்பி னார்.

# ஏமனில் மரண தண்டனைக்கு எதிரான கேரள நர்சின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி!

**பாலக்காடு, நவ.19:**

கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோடு பகுதியை சேர்ந்தவர் நிமிஷா பிரியா (33). இவர் தெற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் கடந்த 2011-ம் ஆண்டு முதல் நர்சாக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் கடந்த 2017-ம் ஆண்டு அந்த நாட்டை சேர்ந்த தலால் அபு மஹதி என்பவரை மயக்க மருந்து செலுத்தி கொல்லப்பட்டார்.

இந்த வழக்கில் நிமிஷா பிரியா கைது செய்யப்பட்டார். அவருக்கு அந்த வழக்கில் 2018-ம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டார். நிமிஷா பிரியாவை மீட்டு சொந்த ஊருக்கு அழைத்து வரும் நடவடிக்கையில் அவரது தாய் பிரேமா மேரி ஈடுபட்டார். ஏமனுக்கு செல்ல தனக்கு அனுமதி வழங்கக்கோரி டெல்லி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

அதனை பரிசீலித்த நீதிமன்றம், இந்த விவகாரத்தில் ஒரு வாரத்தில் முடிவெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து ஏமன் நாட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை ஏமன் நாட்டு உச்சநீதிமன்றம் நிராகரித்து உள்ளது. இதனால் நர்சு நிமிஷா பிரியாவின் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

# சிங்கப்பூரில் நேதாஜி நினைவிடத்தில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் மலரஞ்சலி



**சிங்கப்பூர், நவ.19:**

சிங்கப்பூரில் நேதாஜி நினைவிடத்தில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்தோனேசியாவில் 10-வது ஆசியன் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மத்திய பாதுகாப்புதுறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஜகர்த்தா நகருக்கு சென்றார். அவர் நேற்று முன்தினம் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், இந்தோனேசியா மற்றும் வியட்நாமின் பாதுகாப்புதுறை அமைச்சர்களுடன் இருதரப்பு கூட்டங்களையும் நடத்தினார்.

இதன்பின் சொந்த நாட்டுக்கு திரும்பும் வழியில், சிங்கப்பூருக்கு மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பயணம் மேற்கொண்டார். அவர், இந்திய தேசிய ராணுவத்திற்கான நினைவிடத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இதுபற்றி எக்ஸ் சமூக ஊடகத்தில் அவர் வெளியிட்ட செய்தியில், இந்திய தேசிய ராணுவத்தின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினேன். இந்திய தேசிய ராணுவத்தின் ‘அடையாளம் தெரியாத வீரர்களுக்கு’ என்னுடைய மனப்பூர்வ அஞ்சலியை செலுத்தினேன் என தெரிவித்து உள்ளார்.

1945-ம் ஆண்டு, ‘அடையாளம் தெரியாத வீரர்களுக்கான’ நினைவிடம் அமைப்பதற்கான அடிக்கல்லை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நாட்டினார். இதன்பின் 1995-ம் ஆண்டில், சிங்கப்பூரின் தேசிய பாரம்பரிய வாரியம் ஆனது, அதே இடத்தில் இந்திய தேசிய ராணுவத்திற்கான அடையாளம் ஒன்றை ஏற்படுத்தி நினைவிடம் ஆக்கியது என மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

இதனை தொடர்ந்து, சிங்கப்பூரில் மிக பழமையான 1855-ம் ஆண்டையொட்டி எழுப்பப்பட்ட ஸ்ரீஸ்ரீனிவாசபெருமாள் கோவிலில், மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் சாமி தரிசனம் மேற்கொண்டார்.

# கள்ளக்காதலி மரணம்! இரவோடு இரவாக சடலத்தை புதைத்த கள்ளக்காதலன்

**தருமபுரம், நவ.19:**

ஆந்திர மாநிலம் தருமபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அனந்தபுரம் பகுதியைச் சேர்ந்தவர் வெங்கடேஷ் (45). இவரது முதல் மனைவி லட்சுமி கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்ததாக கூறப்படும் நிலையில் தற்போது இவரிடம் ஆண் குழந்தை மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில் சென்னையில் இருந்த வெங்கடேஷ் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டைக்கு வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் வெங்கடேஷ் ஆதரவின்றி புதுக்கோட்டையில் தர்மம் எடுத்து வந்த ஆராயி (40) என்ற பெண்ணுடன் தொடர்பு ஏற்பட்டு பின்னர் அவரோடு சாலை ஓரத்திலும் கிடைக்கும் இடங்களிலும் வசித்து வரும் வெங்கடேஷ் சாலைகளில் கிடக்கும் பேப்பர், பிளாஸ்டிக் உள்ளிட்ட பழைய பொருட்களை பொறுக்கி அதனை விற்று நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் வெங்கடேஷ் மற்றும் ஆராயி கடந்த 10 தினங்களுக்கு மேலாகவே மது அருந்திவிட்டு இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு தகராறு நடந்த நிலையில், சம்பவத்தன்று நள்ளிரவு ஆராயி உடல்நிலை சரியில்லாததால் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் டிவிஎஸ் கார்னரிலிருந்து ரயில்வே நிலையம் செல்லும் சாலையில் மாணிக்கம் நகர் அருகே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் பராமரிப்பு இல்லாமல் உள்ள முருகன் கோயில் அருகே வெங்கடேஷ் உயிரிழந்த ஆராயியின் சடலத்தை கைகளாலே குழி தோண்டி புதைத்துள்ளது பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இதுகுறித்து காவல்துறையினருக்கு தகவல் கொடுத்ததை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற நகர காவல்துறை துணை கண்காணிப்பாளர் ராகவி தலைமையிலான நகர காவல் துறையினர் வெங்கடேஷிடம் விசாரணை மேற்கொண்ட போது ஏற்கனவே வெங்கடேஷின் மனைவி லட்சுமி காச நோயால் உயிரிழந்த நிலையில் அவரையும் யாருக்கும் சொல்லாமல் புதைத்து விட்டதாகவும் அதன்படி நள்ளிரவு உடல்நிலை சரியில்லாததால் உயிரிழந்த ஆராயியின் உடல்களை கைகளாலே குழி தோண்டி அதிகாலையில் புதைத்து விட்டதாகவும் கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த காவல்துறையினர், வெங்கடேசை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பின்னர் நகராட்சி பணியாளர்களை வரவழைத்து வெங்கடேஷ் புதைத்ததாக கூறிய ஆராயியின் உடலை தோண்டி எடுத்த போது அவர் ஆடையின்றி இருந்ததை தொடர்ந்து துணியால் அவரது உடலைமூடி பின்னர் அவரது சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றனர். மேலும் ஆராயி உடல்நிலை சரியில்லாமல் உயிரிழந்ததால் அவரை வேறு எங்கு கொண்டு செல்வது என்று தெரியாமல் புதைத்து விட்டதாக வெங்கடேஷ் கூறக்கூடிய நிலையில் நகர காவல் துறையினர் முதற்கட்டமாக சந்தேக மரணம் என்று வழக்கு பதிவு செய்தனர்.

வெங்கடேஷ் கூறியபடி உண்மையிலுமே ஆராயி உடல்நிலை சரியில்லாததால் தான் உயிரிழந்தாரா? அல்லது மது போதையில் வெங்கடேஷ் ஆராயியை கொலை செய்து புதைத்து விட்டாரா என்பது குறித்து விசாரணை நடத்தி வரக்கூடிய நிலையில் ஆராயியின் பிரேத பரிசோதனை முடிவு வந்த பிறகு இதற்கான விடை கிடைக்கும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் நூற்றுக்கணக்கானோர் அப்பகுதியில் குவிந்ததால் பதட்டமான சூழல் நிலவியதைத் தொடர்ந்து அவர்களை காவல்துறையினர் கலைந்து போக சொல்லி அறிவுறுத்தி அந்த கூட்டத்தை கலைத்தனர். மேலும் வெங்கடேசிடம் இருந்த அவரது குழந்தைகள் என்று கூறப்படும் ஒரு சிறுவன் மற்றும் ஒரு சிறுமி பெண்மணியின் சடலத்தைதோண்டி எடுத்த போது கதறி அழுத நிலையில் காவல்துறையினர் அந்த இரண்டு பேரையும் காப்பகத்திற்கு கொண்டு செல்ல அழைத்துச் சென்றனர்.

**IndoStar Home Finance Private Limited**

**Regd. Office:** - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
**CIN :** U65990MH2016PTC271587 **Tel:** +91 22 45107701
**Email:** connect@indostarhfc.com; **Website:** www.indostarhfc.com

**அறிவிப்பு**

நிறுவனத்தின் கிளை அலுவலகம், 3/1/45/5Dஇல் உள்ள 2021 ஆம் ஆண்டுக்கான முதன்மை திசை-வங்கி அல்லாத நிதி நிறுவனம் - ஹவுசிங் ஃபைனான்ஸ் கம்பெனி (ரிசர்வ் வங்கி) திசைகள், 2021 இன் பத்தி 93 இன் அடிப்படையில் அறிவிப்பு இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. கேஎஸ் டவர்ஸ், 1வது தளம் தேனி -கம்பம் மெயின் ரோடு, பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம் 625531. 3/1/45/4, D.K.S இல் அமைந்துள்ள அருகிலுள்ள கிளை அலுவலகத்திற்கு செயல்பாடுகள் மாற்றப்படுவதால், பிப்ரவரி 17, 2024 அன்று வணிக நேரம் முடிந்தவுடன் மூடப்படும். டவர்ஸ், 2வது தளம், தேனி கம்பம் மெயின் ரோடு, பழனி செட்டி பட்டி, தேனி, தமிழ்நாடு- 625531. ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகிலுள்ள கிளை அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் அல்லது connect@indostarhfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்தில் (www.indostarhfc.com) அணுகலாம்.

இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
Sd/-
நிதி சதானி
நிறுவன செயலாளர்

தேதி: 18.11.2023




ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் ஏ.எம்.எல் அணி நண்பர்கள் சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு தீபாவளி பரிசாக போர்வைகள் மற்றும் மளிகைப்பொருட்கள் வழங்கப்பட்டது. கோபிசெட்டிபாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் ஏ.எம்.எல். அணி உறுப்பினர்கள் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர் அதன்தொடர்ச்சியாக தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஏ.எல். எம் அணித்தலைவர் கணேசன் தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி கோகுலம் கார்டன் பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஏ.எல்.எம் அணியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு மளிகைப்பொருட்கள் மற்றும் போர்வைகள் அடங்கிய தொகுப்பினை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஏ.எம்.எல். அணியை சேர்ந்த நிர்வாகிகளும் நண்பர்களும் கலந்துகொண்டனர்.

DINAKURAL - TAMIL DAILY Owned and Published by G.Sathiyanarayanan from No.13, North Wall Road, Mint Terminus, Kondithopu, Chennai-600 079. Printed by : P.Baslar at Ambiga Printers, No.37/19, Ayalur Muthiah Street, Kondithopu, Chennai-600 079, Ph : 04142-236004, Fax : 04142-236004, Editor : G.Sathiynarayanan, E-mail : dinakural.sathiya@gmail.com,dinakuralnew@yahoo.com, dinakural.chennai@yahoo.in